<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 138/2022</u>**

CNR.No. TNTM04–000376–2022

RISID FINANCES, தற்கால மேலாளர் யுவராஜ்
என்பவரால் எடுத்துரைக்கப்படுகீறது. . . . வாதி

// எதிர் //

1. முனுசாமி (இறந்துவிட்டார்)
2. பூங்காவனம்,
3. பொற்செல்வன்,
4. கலைச்செல்வன்,
5. செல்வமணி,
6. பொற்கொடி,
7. கலைமகள், . . . பிரதிவாதிகள்

(Amended as per order in I.A.No.4/2025 dt 21.04.2025)

இவ்வழக்கானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்தநிலையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி உத்தரவிற்கிணங்க விடுவி.எண்.5664/2024 தேதி 30.10.2024 ன் கீழ் கூடுதல் சார்பு நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 23.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 7 பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>தீர்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதிகள் 24.05.2019 தேதிய கிரைய ஒப்பந்தம் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும், பிரதிவாதிகள் கிரையபாக்கித் தொகையை பெற்றுக்கொள்ள மறுக்கும்பட்சத்தில் கனம் நீதிமன்றத்தார் அவர்களே கிரையபாக்கித் தொகையை பெற்று வைப்பீடு செய்து கொண்டு தாவா சொத்தினை வாதி பெயருக்கு



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:14:59 +0530

நேரடியாக பிரதிவாதிக்கு பதிலாக பத்திரப்பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் அளிக்க கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும்.

2. **<u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**

தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா ஷெட்யூல் சொத்தினை பிரதிவாதி வாதி நிறுவனத்திற்கு சுத்த கிரையம் பேசி விலை நிச்சயித்த தொகை ரூ.2,60,000/−க்கு கிரையம் கொடுக்க ஒப்புக்கொண்டு 24.05.2019 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் எழுதி அன்றைய தேதியிலேயே முன்பணமாக ரூ.2,25,000/− வாதி நிறுவனத்திடம் ரொக்கமாக பெற்றுக்கொண்டு ஒரு கிரைய உடன்படிக்கை ஆவணம் தூசி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1209/2019ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்சொன்ன கிரைய உடன்படிக்கை ஷரத்துப்படி பிரதிவாதிக்குசெலுத்தவேண்டிய கிரைய பாக்கித்தொகை ரூ.10000/−ஐ கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்டு பதிவு செய்துகொள்ளலாம் என்பது ஏற்படாகும் என்றும், அதன் அடிப்படையில் வாதி நிறுவனத்தின் சார்பாக வாதி பிரதிவாதியை பலமுறை நேரில் அணுகி கிரைய பாக்கி தொகை தயார் நிலையில் வைத்துக்கொண்டு அதனை பெற்றுக்கொண்டு பதிவுசெய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டும் பிரதிவாதி பதிவு செய்துகொடுப்பதாக காலம் கடத்தி வந்தார் என்றும், கிரைய ஒப்பந்தப்படி மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு பதிவு செய்து கொடுக்க வேண்டிய கடமையிலிருந்து பிரதிவாதி தவறிவிட்டார் என்றும், பிரதிவாதி கிரையப்பாக்கி தொகையை பெற்றுக்கொண்டு பதிவு செய்துகொடுக்க முன்வராததால் வாதி நிறுவனம் சார்பாக கடந்த 02.09.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி அதில் கிரைய பாக்கி தொகை ரூ.10000/− தயார் நிலையில் வைத்துக்கொண்டு இருப்பதாகவும் அதனால் அதனைப் பெற்றுக்கொண்டு தாவா சொத்துக்களை வாதி நிறுவனத்தின் பெயருக்கு பத்திரம் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என கேட்டுககொண்டிருந்தார் என்றும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு இதுநாள் வரையில் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றும், தாவா ஷெட்டியூல் சொத்துது குறித்து வாதி நிறுவனத்திற்கு பிரதிவாதி

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.04.02 18:15:10 +0530

எழுதி பதிவு செய்து கொடுத்துள்ள 24.05.2019 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணப்படி நிறைவேற்றிக்கொள்ள உரிய பத்திரப்பதிவு செலவுத்தொகையுடன் எப்போதும் இப்போதும் விருப்பத்துடனே வாதி நிறுவனம் தயாராக இருந்து வருகிறது என்றும், கனம் நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் எந்த நேரத்திலும் கிரைய பாக்கித்தொகையை டெபாசிட் செய்ய வாதி நிறுவனம் தயாராக உள்ளது என்றும், கிரைய ஒப்பந்தத் தேதி 24.05.2019 மூன்று வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றும், ஆனால் மே மாதம் கோடை நீதிமன்ற விடுமுறை காலம் என்பதால் காலதோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்றும், தாவா ஷெட்யூல் சொத்துக்கள் குறித்து 24.05.2019 அன்று ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கைப்படி கிரைய பாக்கித்தொகை ரூ.10000/- ஐ பிரதிவாதி பெற்றுக்கொண்டு வாதி நிறுவனத்திற்கு பத்திரப்பதிவு செய்துகொடுக்க வேண்டுமென தக்க உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் அவ்வாறு பிரதிவாதி பத்திரப்பதிவு செய்துகொடுக்க மறுக்கும்பட்சத்தில் கனம் கோர்ட்டார் அவர்களே பிரதிவாதிக்காக 24.05.2019 தேதியிட்ட கிரைய ஒப்பந்த அடிப்படையில் வாதி நிறுவனத்தின் பெயருக்கு கிரையப்பத்திரம் பதிவு செய்து கொடுத்து தாவா சொத்துக்களை வாதி நிறுவனத்திடம் சுவாதீனம் அளிக்கும் வகையில் தக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டியது அவசியமும் நியாயமுமாகிறது என்றும், தாவா நிலுவையில் இருக்கும்பொழுது 1ஆம் பிரதிவாதி முனுசாமி 15.06.2022அன்று இறந்துவிட்டதால் அவருடைய சட்டப்படி வாரிசுகளாக 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பினராக சேர்க்க வேண்டி I.A.No.3/2023 படி மனு தாக்கல் செய்து அந்த மனு கோர்ட்டார் அவர்களால் 21.01.2025 அன்று அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், எனவே வாதிக்கு பிரதிவாதிகள் 24.05.2019 தேதிய கிரைய ஒப்பந்தம் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும், பிரதிவாதிகள் கிரையபாக்கித் தொகையை பெற்றுக்கொள்ள மறுக்கும்பட்சத்தில் கனம் நீதிமன்றத்தார் அவர்களே கிரையபாக்கித் தொகையை பெற்று வைப்பீடு செய்து கொண்டு தாவா சொத்தினை வாதி பெயருக்கு நேரடியாக பிரதிவாதிக்கு பதிலாக பத்திரப்பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் அளிக்க கோரி வாதியால் வழக்கு தாக்கல்.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:17 +0530

3. பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்புகள் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

4. இவ்வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்னையில் உள்ள சங்கதிகள் என்னவென்றால்,

1. வாதி ஒப்பந்தப்படி ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்து வந்துள்ளாரா ?
2. வழக்கில் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கதா ?
3. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது ?

5. வாதி தரப்பில் வாதி நிறுவனத்தின் மேலாளர் திரு.யுவராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.–1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணசாட்சியம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் வழக்கு சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அச்சொத்தினை 1ஆம் பிரதிவாதி வாதி நிறுவனத்திற்கு கிரையம் செய்து கொடுக்க முடிவு செய்து அதற்கு மறுபயனாக கிரையத்தொகை ரூ.2,60,000/– முடிவு செய்யப்பட்டு அதற்கு முன்பணமாக ரூ.2,50,000/– வாதி நிறுவனத்திடம் 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு இருவருக்குமிடையே வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும், மீதி கிரையத்தொகையான ரூ.10,000/– ஐ வாதி நிறுவனத்தினர் 1ம் பிரதிவாதியிடம் செலுத்தி கிரையபத்திரம் எழுதி பதிவு செய்வதற்கு தயாராகவும், விருப்பமாகவும்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:23 +0530

இருந்தார்கள் என்றும், ஆனால் 1ஆம் பிரதிவாதி வாதி நிறுவனத்துக்கு கிரையப்பத்திரம் எழுதி பதிவு செய்துக்கொடுக்காமல் மறுத்துவிட்டனர் என்றும், அதனால் வாதி நிறுவனம் 1ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், அந்த அறிவிப்பினை 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு வாதி நிறுவனம் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை மறுத்து 1ஆம் பிரதிவாதி எந்தவொரு பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்றும், வழக்கானது விசாரணைக்காக இருந்து வந்தநிலையில் 1ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், 1ஆம் பிரதிவாதிக்கு 2 முதல் 7 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றும், எனவே வா.சா.ஆ.1 கிரையஒப்பந்தப்படி தாவா சொத்தை வாதி நிறுவனத்திற்கு கிரையப்பதிவு செய்து கொடுக்க 2 முதல் 4 பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் என்றும், வாதி வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளை வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், எனவே, வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை அனுமதித்து தீர்ப்பளிக்குமாறு வாதிட்டார்.

7. பிரச்சணை எண். 1 முதல் 3ற்கான தீர்வு

வாதி வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தானது இவ்வழக்கின் தீர்வுக்காக இனி தாவா சொத்து என்று அழைக்கப்படும். பிரச்சணை எண்.1 மற்றும் 2 ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பதால் அவைகளில் ஒருங்கினையாக பரிசீலனை செய்வது ஏற்புடையது என்பதாலும், மேற்சொன்ன பிரச்சனை எண்.1 மற்றும் 2 ஒருங்கினையாக பரிசீலனை செய்யப்படுகிறது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:29 +0530

8. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வாதி நிறுவனம் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து வாதி நிறுவனத்துக்கு ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வழங்கி தாவா சொத்தை வாதி நிறுவனம் பெயருக்கு பிரதிவாதிகள் கிரையப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்கும்படிக்கும் மற்றும் செலவுத்தொகைக்காகவும், வாதி நிறுவனத்தால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா கிரைய ஒப்பந்தமானது 24.05.2019அன்று ஏற்பட்டுள்ளது. வாதி இத்தாவாவினை 01.06.2022 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மே மாதம் விடுமுறை காலம் என்பதால் விடுமுறை காலம் முடிந்து ஜூன் மாதம் முதல் நாளில் வாதி இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளதால் வாதியின் இத்தாவாவானது காலாவாதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை. வாதி நிறுவத்தின் சார்பாக அதன் மேலாளர் யுவராஜ் என்பவர் முதன்மை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். தாவா சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். வாதி தரப்பில் 19.05.2019தேதியிட்ட பதிவு கிரைய ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமானது பதிவு செய்யப்பட்ட ஆவணமாகும். வா.சா.ஆ.1ல் வாதி நிறுவனத்துக்கு 1ஆம் பிரதிவாதி தாவா சொத்தைப் பொறுத்து ரூ.2,60,000/−த்திற்கு கிரையம் செய்து கொடுப்பதாக பேசி அட்வான்ஸாக ரூ.2,50,000/− பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு, மீதமுள்ள ரூ.10,000/−த்தை 3 மாதத்திற்குள் 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு வாதி நிறுவனத்துக்கு கிரையப்பத்திரம் எழுதி பதிவு செய்துக்கொடுக்க வேண்டுமென்று வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது. தாவாவானது விசாரணைக்காக இருந்து வந்தநிலையில் 1ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார். 1ஆம் பிரதிவாதியின் வாரிசுகள் 2 முதல் 7 பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:40 +0530

9. மேலும் வாதி நிறுவனமானது பிரதிவாதிகளுக்கு 02.09.2020 தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பினை 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு எந்தவொரு பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்பது தாவா ஆவணத்திலிருந்து அறியமுடிகிறது. வாதி தனது தாவாவில் தெரிவித்துள்ள சங்கதிகளை அனுசரித்து வா.சா.1 ஆக முதன்மை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். வாதி நிறுவனத்திற்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தைப் பொறுத்து 24.05.2019 தேதியன்று கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பது வாதி தரப்பில் மிகத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்ததத்தினை வாதி நிறுவனமானது அடைந்து நிறைவேற்றுக்கொள்ளும் விதமாக 1ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 அறிவிப்பானது அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பினை 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்ததத்தில் கண்டுள்ள ஷரத்துப்படி தாவா சொத்தினை 1ஆம் பிரதிவாதி வாதி நிறுவனத்திற்கு கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க முன்வரவில்லை என்பது மிகத்தெளிவாக தெரியவருகிறது. அந்த வகையில் தாவா சொத்தைப் பொறுத்து வாதி வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தினை நிறைவேற்றிக்கொள்ள விருப்பமாகவும், தயார் நிலையிலும் இருந்துள்ளார் என்பது மிகத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் வாதி வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யவில்லை. மாறாக பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாதி தனது தாவாவினை தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்கள் கொண்டு நிரூபித்துள்ளதால் 1ஆம் பிரதிவாதியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்படி கிரையப்பத்திரம்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:46 +0530

எழுதி வாதிக்கு பதிவு செய்துக்கெடுக்க வேண்டிய கடமை 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கு உள்ளது. வாதி தனது தாவாவினை தகுந்த சாட்சியங்களைக் கொண்டு நிரூபித்துள்ளதால், வாதிக்கு ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் அளிக்கத்தக்கது என எழுவினா 1 மற்றும் 2ஐ பொறுத்து வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10. வாதி தாவாவில் கோரியுள்ளபடி தாவா சொத்தைப் பொறுத்து ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் எழுவினா 1 மற்றும் 2ஐ பொறுத்து தீர்வு காணப்பட்டுள்ளதாலும், வாதி 1ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவுடன் தாவா சொத்தினை 1ஆம் பிரதிவாதி வாதிநிறுவனத்துக்கு வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்படி கிரைய பதிவு செய்து கொடுத்திருப்பாரேயானால் வாதி நிறுவனமானது இத்தாவாவினை பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது. பிரதிவாதிகள் வாதி நிறுவனத்துக்கு இத்தாவா தாக்கல் செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். எனவே பிரதிவாதிகள் வாதிக்கு தாவா செலவுத்தொகை அளிக்கத்தக்கது என எழுவினா 3ஐ பொருத்து தீர்வு காண்கிறது.

இறுதியாக வாதி தாக்கல் செய்துள்ள இத்தாவாவானது செலவுத்தொகையுடன் அனுமதித்து வா.சா.ஆ.1 கிரையஒப்பந்தப்படி பாக்கி கிரையத்தொகை ரூ.10,000/- வாதி நிறுவனத்திடம் 2 முதல் 7 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு தாவா சொத்தை 3 மாத காலத்திற்குள் வாதி நிறுவனத்தின் பெயருக்கு கிரையப்பத்திரம் எழுதி அதனை பதிவு செய்து கொடுக்கவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றமே முன்நின்று வாதிக்கு தாவா சொத்தை பத்திரப்பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் அளிக்கும்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:53 +0530

என்றும், கிரைய பாக்கி தொகையான ரூ.10,000/- ஐ இத்தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் வாதி நிறுவனமானது இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:16:06 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :**

வா.சா.1 - திரு.யுவராஜ், த/பெ.ஆனந்தன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| வ.சா.ஆ.1 | 24.05.2019 | பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஒப்பந்தம் |
| வ.சா.ஆ.2 | 02.09.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வ.சா.ஆ.3 | - | பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.02 18:15:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.